ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களது கல்விப்பணி

(இரு பக்கங்களுக்குள் மட்டுப்படுத்தப்பட்ட சிறு ஆக்கம்)

கலாநிதி க.ஞானரெத்தினம்

அறிமுகம்:

நல்லை நகர் ஆறுமுகநாவலர் பிறந்திலரேல்
சொல்லு தமிழெங்கே சுருதி எங்கே - எல்லவரும்
ஏத்து புராணாகமங்கள் எங்கே பிரசங்கமெங்கே
ஆத்தனறி வெங்கே அறை. - சி.வை.தாமோதரம்பிள்ளை

ஆங்கிலேயர் ஆட்சியில் மிசனரிமார்கள் எம் நாடுவந்து கிறிஸ்தவ சமயத்தைப் பரப்புவதிலும், ஆங்கிலக் கல்வியை வளர்ப்பதிலும், சுதேசிய சமயத்துக்கு எதிரான பிரசாரங்களிலும் ஈடுபட்டனர். இதனால் சுதேசிகள் பலர் கிறிஸ்தவ மதத்திற்கு மாறினர். இக்காலத்தில் யாழ்ப்பாணம், நல்லூர் கந்தப்பிள்ளை - சிவகாமி அம்மையார் தம்பதிகளுக்கு 'ஆறுமுகம்' என்ற பிள்ளைத் திருநாமத்துடன் 1822.12.18 அன்று ஆறுமுகநாவலர் அவதரித்தார். இவர் இளமைப் பருவத்தில் நல்லூர் சுப்பிரமணிய உபாத்தியாயர், சரவணமுத்துப் புலவர், இருபாலை சேனாதிராய முதலியார் ஆகியோரிடம் குருகுல முறைப்படி இலக்கிய, இலக்கணங்களையும், சைவசமயசாத்திரங்களையும், வட மொழியையும் பயின்றார். ஆங்கிலக் கல்வியை யாழ்ப்பாணம் வெஸ்லியன் மெதடிஸ்ட் மிஸன் கல்லூரியில் கற்றார். தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம் ஆகிய மும்மொழிகளிலும் பாண்டித்தியம் பெற்ற இவர் சைவத்தையும் தமிழையும் இரு கண்களாகப் போற்றினார். உரைநடை, பதிப்பு, நாவன்மை, சைவ வாழ்வு, சைவ மக்களின் கல்வி மேம்பாடு போன்றவற்றில் சிறப்புற்ற இவருக்கு 1849 ஆம் ஆண்டு திருவாவடுதுறை ஆதீனம் "நாவலர்" என்ற பட்டம் சூட்டி கௌரவித்தது. நாவலரது பணிகள் சைவசமயக் கல்வி வளர்ச்சிக்கும் நிலைபேறுக்கும் சைவசித்தாந்தக் கோட்பாட்டின் விருத்திக்கும் வழிவகுத்ததன் காரணமாக "ஐந்தாம் சமய குரவர்" என்றும் போற்றப்படுகின்றார்.

ஆறுமுகநாவலரின் பணிகள்:

நாவலர் பெருமான் தனது சொல்லாலும் எழுத்தாலும் மக்கள் அகக் கண்களைத் திறந்து அவல நிலையைப் போக்கினார். சைவமும், தமிழும் மீண்டும் புத்துயிர் பேறவெண்டும் என்பதற்காகவும் கல்வியழகும் தெய்வ நெறியும் பொலிந்து விளங்கும் சைவ சமுகத்தைக் காண்பதற்காகவும் சமயப்பணி, கல்விப்பணி, தமிழ்ப்பணி, சமுதாயப்பணிகளை மேற்கொண்டார்.

ஆறுமுகநாவலரின் கல்விப் பணிகள்:

கற்பித்தல்: யாழ் வெஸ்லியன் மெதடிஸ்ட் மிஸன் கல்லூரியில் 1941 இல் ஆசிரியராகப் கடமையேற்ற நாவலர் தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு பாடங்களையும் கற்பித்தார். அதிபரின் வேண்டுகோளின்படி பைபிளைத் தமிழில் மொழிபெயர்த்துதவினார்."சைவசமயத்தையும் கல்வியையும் வளர்த்தல் வேண்டும்" என்ற நோக்கில் தமது பதவியை 1948 இல் விட்டு விலகினார்.

சைவசமயிகளின் மேம்பாட்டிற்கு அடிப்படை மூலதனம் கல்வி என்பதனை உணர்ந்த நாவலர் கல்வியை வளர்ப்பதனை நோக்கமாகக் கொண்டு பாடசாலைகள், திண்ணைப் பள்ளிக்கூடங்களை அமைத்தும் அச்சியந்திர சாலைகளை உருவாக்கி நூல்களைப் பதிப்பித்தும் இலவசக் கல்விக்கு

உரம் ஊட்டினார். இதனால் இலவசக் கல்விக்கு வித்திட்ட முதல் சைவப்பெருமகன் என்ற பெருமை இவருக்குண்டு.

பாடசாலை ஸ்தாபிதம்: நாவலர் 1848 இல் யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையில் சைவப் பிரகாச வித்தியாசாலையையும் 1864 இல் தமிழகத்திலுள்ள சிதம்பரத்தில் சைவப் பிரகாச வித்தியாசாலையையும் ஸ்தாபித்தார். தொடர்ந்து 1872 இல் புலோலி, கோப்பாய் முதலான இடங்களிலும் பாடசாலைகளை நிறுவினார்.

பாடத்திட்ட உருவாக்கமும் பாடநூலாக்கமும்: பாடசாலைகளுக்குத் தேவையான நூல்களை ஆக்கி வெளியிடும் வகையிலும், செல்லரித்துப்போகும் நூல்களைப் பதிப்பித்தற் பொருட்டும் 1849 இல் நல்லூரிலே "வித்தியாநுபாலன இயந்திரசாலை" என்ற ஓர் அச்சியந்திரசாலையை நிறுவினார். தமது பாடசாலைகளுக்காக 1ஆம், 2 ஆம், 4 ஆம் பால பாடம், சைவ வினாவிடை 1 ஆம், 2 ஆம் புத்தகங்கள், இலக்கணச் சுருக்கம், இலக்கண வினாவிடை, இலங்கைப் பூமிசாஸ்திரம், சிவாலய தரிசன விதி, சிதம்பர மான்மியம் முதலான நூல்களை எழுதி வெளியிட்டார். வசனரூபமாக இவர் எழுதி வெளியிட்ட நூல்களில் பெரியபுராண வசனம் மிகவும் பெருமைக்குரியதாகும். அத்துடன் ஆத்திச்சூடி, கொன்றை வேந்தன், நன்னெறி, நல்வழி போன்ற நூல்களுக்கு உரை எழுதியதோடு சூடாமணிநிகண்டு, நன்னூல் விருத்தியுரை, கந்தரலங்காரம், கந்தரனுபூதி, சிதம்பரமும்மணிக் கோவை, கந்தபுராணம், பெரியபுராணம், திருச்சிற்றம்பலக்கோவையுரை, திருமுருகாற்றுப்படை உரை முதலான 35 இற்கு மேற்பட்ட நூல்களை இவர் பதிப்பித்தார்.

மாணவர் பரம்பரை உருவாக்கம்: ஆறுமுகநாவலர் தனக்குப் பின்னர் தனது பணிகளைத் தொடர்ந்து ஆற்றச் சிவசங்கரபண்டிதர், சி.வை.தாமோதரம்பிள்ளை, பொன்னம்பலபிள்ளை, காசிவாசி செந்திநாத ஐயர், சபாபதி நாவலர், சதாவதானிகதிரவேற்பிள்ளை முதலான சைவப்பெரியார்களை நெறிப்படுத்தி தமிழ் , சமய நன்நெறி ஈழத்திலும் இந்தியாவிலும் தொடர வழிவகுத்தார்.

முடிவுரை:

பத்தொன்பதாம் நூற்றாண்டின் சமயப்பணி, கல்விப்பணி, தமிழ்ப்பணி, சமுதாயப்பணிகளை மேற்கொண்ட நாவலர் பெருமான் 21.12.1879 இல் இறையடி சேர்ந்தார். நாவலர் பணிகளைத் தொடர உருவாக்கப்பட்ட "நாவலர் சபை" 1979ஆம் ஆண்டு நாவலர் நூற்றாண்டு விழாவை நடாத்தியது. நாவலரைச் சுதேசியப் பெரியார்களில் ஒருவராக இலங்கை அரசாங்கம் அங்கீகரித்து 1971 இல் முத்திரை ஒன்றையும் வெளியிட்டது. அத்துடன் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலுக்கருகில் நாவலர் மணிமண்டபமும் நாவலர் வீதியில் இந்து கலாசார திணைக்களத்தினால் நாவலர் கலாசார மண்டபமும், தொல்பொருளியல் திணைக்களத்தினால் யாழ்ப்பாணத் தொல்பொருட்காட்சிச் சாலையும் நிறுவப்பட்டன. நாவலர் பெருமானின் 200 வது அகவையை "இந்துசமய கலாசார

அலுவல்கள் திணைக்களம் மற்றும் இந்து பண்பாட்டு நிதியம்'' இவ்வருடம் நடாத்தவிருப்பது நாவலா் பெருமானுக்கு மேலும் மகுடம் சூட்டும் நிகழ்வென நினைத்துப் இந்துக்களாகிய நாம் பெருமை கொள்வோம்.

கலாநிதி க.ஞானரெத்தினம்